


**கடந்த மாதம் 16.7.2004 வெள்ளிக்கிழமை அன்று கும்பகோணத்தில் பள்ளியில் நடைபெற்ற தீ விபத்தில் உயிரிழந்த பிஞ்சு மலர்களின் ஆத்மா சாந்தியடைய கௌமாவின் சார்பில் கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறோம்.**

*நமது சங்கத்தின் முன்னாள் உதவித்தலைவரும்*
**வீனஸ் இன்ஞ்னீயரிங் இண்டஸ்ட்ரீஸ்** *உரிமையாளர்*
**திரு. ஆ. நடராஜன்** *அவர்கள் அனுப்பியுள்ள கவிதை.*

# அக்கினிக் குஞ்சுகள்





ர்ளிக்குப் படிக்கச் சென்ற இளம் பிஞ்சுகள்
காள்ளிக்கு இரையான சிறு குஞ்சுகள்
க் கொள்ளிக்கு சிறையான சின்னச் சின்ன நெஞ்சுகள்

ங்கட் கிழமை தமிழ்ப் பாடம்
செவ்வாய்க் கிழமை ஆங்கிலப் பாடம்
புதன் கிழமையோ, பூகோளம் – சரித்திரப் பாடம்
வியாழக்கிழை கணக்குப் பாடம்
வெள்ளிக் கிழமை (16.7.2004) மட்டும் ஏன் நெருப்புப் பாடம் –
அந்த பள்ளிக்கு மட்டும் ஏன் ? அக்கினிப் பரிட்சை

பள்ளிப் பரிட்சியில் தேறியவர்கள்
கொள்ளிப் பரிட்சையில் தவறினார்கள்
தீக்கொள்ளிப் பரிட்சையில் திணறினார்கள்

அக்னிப் பரிட்சை வைத்தது யார் ?
அதுதான் யாருக்கும் புரியாத புதிர் !
அக்கினிப் பரிட்சையிலும் தேறியிருப்பார்கள் அந்தப் பிஞ்சுகள்
அக்கறையோடு, அங்கிருந்தவர்கள் செயல்பட்டிருந்தால்
அக்கினிப் பரீட்சை எழுதிப் பார்த்த அந்தக் குஞ்சுகள்
ஆண்டவனையும் அழ வைத்த; அக்கினிப் பிழம்புகள்

இயற்கையின் கொடுமையோ ! இறைவனின் கடுமையோ!
செயற்கைதான் என்றால் – இறைவன் இரக்கமற்றவனா !
இறைவன் இருக்கின்றான் என்றால் அவன் அங்கிருந்தானா ?
மறைந்தானா ! மறந்தானா ! சதிக் – குடந்தை இயற்கையா –
செயற்கையா ?

கடவுள் இருப்பது உண்மையென்றால் – அவன்
கடமை தவறிவிட்டான் எனலாம்
கடவுள் கண்டனத்தோடு நின்றிருக்கலாம்
கடுமையான தண்டனையைத் தவிர்த்திருக்கலாம்.

பாவம் ஓரிடம், பழி ஓரிடம்
பாவம் செய்தவர்கள் யார் யாரோ?
பழி சுமந்தவர்கள் பிஞ்சு மலர்களே
பாவம் செய்தது மரங்களென்றால்
பழியைச் சுமந்தது சின்னஞ்சிறு மலர்கள்தானே !
இதயத்திலிருந்து வரும் ஒவ்வொரு நினைவும் சொல்லும் – இனி
உதயமாகும் ஒவ்வொரு நாளும் பிஞ்சு மலர்களை எண்ணும்

எங்கள் உயிர் இருக்கும் வரை; உங்களை நினைத்திருப்போம்
உங்கள் நினைவோடு ; என்றென்றும் வாழ்ந்திருப்போம்

விதியென்று சொல்லி, ஆறுதல் அடையலாம்
சதியொன்று விதி செய்தது எனப் பொருளும் கொள்ளலாம்.
விதியை நொந்து வீதியில் ஓடியவர்களைக் கண்டு
சதியைப் பார்த்து சகிக்காமல் செத்தவர்களும் உண்டு

கர்மா ; என்று காரணமும் காட்டிடத் தோன்றும்
தர்மம் ; தருமா போன உயிர்களை எனக் கேட்டிடவும் தூண்டும்

திரும்பி வராத இடம் நோக்கி இளம் மலர்கள் சென்றதால்
திருத்தி வைப்போம் விதிகளை–அரசு ; விதிகளைக்கொன்றதால்
திரும்பி பார்த்தால் நமக்குப் பாடம் நிரம்பக் கிடைக்கும்
திருந்தி நடந்தால் வருங்கால சமுதாயம் தழைக்கும்

பஞ்ச பூதங்களில் ஒன்றுதான் நெருப்பு – அது
பிஞ்சு மேனிகளைக் கருக்கியதே யார் பொறுப்பு ?
தஞ்சம் புக வேறு வழியின்றி தணலில் தவிப்பு
கொஞ்சமும் எதிர்பாராத கோர விபத்து.

உதவிக் கரம் நீட்ட அருகிலிருந்தவர்கள் மறுப்பு
முதல் உதவிகூட பஞ்சமாகியதுதான் நமக்கெல்லாம் வியப்பு
வருண பகவான் கருணை இருந்திருந்தால்;
கிடைத்திருக்கும் அமைதி அந்த தருணத்தில் அக்கினி அரக்கன்
வீழ்ந்திருப்பான் அதுவே நிம்மதி

பரந்த நம் நாட்டின் மாபெரும் சொத்துக்கள்
மறைந்து விட்ட நமது மழலை மொட்டுகள்

கடமை தவறியவர்களால் பெற்றவர்களுக்கு தீராத நெஞ்சுவலி
காலமெல்லாம் எதிரொலிக்கும் உங்களது கதறல் ஒலி
கல் நெஞ்சங்களையெல்லாம் கலங்க வைக்கும் உங்களது உயிர்ப் பலி
கல்லறைப் பூக்களுக்கு ; எங்களது கண்ணீர் அஞ்சலி...